**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**IA.No.22/2007 in OS.No.13/2005**

RW1–அபுல்கலாம்ஆசாத் நாள்.16.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சீராய்வுமனு எண். 180/2019 என்று குறிப்பிட்டுஇருப்பது தவறாகும். 180/2025 சரியாக எண்ணாகும். சீராய்வுமனு உத்தவில் பெரம்பலூர் ஸ்டேட்பாங்க்ஆப்இந்தியாவில் நாங்கள் இருவரும் தனித்தனியாக எவ்வளவு செலுத்திஇருக்கிறோம் என்பதை முடிவுசெய்ய வேண்டும் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அசல்வழக்கை தாக்கல் செய்தபின்னர் எனக்கும், வாதிக்கும் இடையே மக்கள் நீதிமன்றத்தில் சமாதானம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சமாதான உடன்படிக்கையை படித்து பார்த்து தான் நான் கையெழுத்து செய்தேன். சமாதானம் உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னர் நான், வாதி வழக்கறிஞர் வாசுதேவன் மற்றும் என்னுடைய வழக்கறிஞர் ஆகியோர்கள் சிறுவாச்சூர் ராம் இன் ஓட்டலில் வைத்து பேசினோம் என்றால் சரிதான். அன்று சமாதான பேச்சுவார்த்தை முடிவாகததால் அன்று இரவு வழக்கறிஞர் வாசுதேவனை சந்ததித்து எப்படியாவது சமாதானம் செய்து வையுங்கள் என்று நான் சொன்னேன் என்றால் சொத்துக்களை ஏலம் விடுவதற்காக வக்கீல் நோட்டிஸ் அனுப்பியுள்ளீர்கள் என்றும், அதை எப்படியாவது திரும்ப பெற்றுக்கொள்ளுங்கள் என்றும், அனைத்து சொத்துக்களையும் விற்று தனிப்பட்ட முறையில் முதலீடு செய்துள்ளேன் என்றும், சொத்துக்கள் காலியாகிவிடும் என்று சொன்னேன். நான் கூறுவதுபோன்று சொல்லவில்லை என்றும், எப்படியாவது சமாதானம் செய்துகொடுங்கள் என்று நானும், என்னுடைய வழக்கறிஞரும் சொன்னோம் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் வாசுதேவன் எனக்கும், மனுதாரருக்கும், என்மாமா சவுகத்அலிக்கும் நன்கு பரீச்சயமையனாவர் என்றும் மற்றும் பழக்கமானவர் என்றால் சரியல்ல. மக்கள் நீதிமன்றத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்படுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தியது வழக்கறிஞர்

வாசுதேவன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கறிஞர் என்னிடம் பேசினார். அவர் யாரிடம் பேசினார் என்று எனக்கு தெரியாது. சமாதான உடன்படிக்கை கண்ட சரத்துகளை ஒப்புக்கொண்டு படித்துபார்த்து நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். சமாதான உடன்படிக்கை படி தாவா 2வது அயிட்ட சொத்தை நானும், என்சகோதரரும் 24.08.2006ம் தேதி பெருமத்தூர் ஊரை சேர்ந்த ஒருவருக்கு கிரயம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரயத்தை மனுதாரரின் முகவர் சவுகத்அலி பேசி அழைத்துவந்தார். சவுகத்அலி தான் கிரயம் பேசினார். கிரயம் பேசும்போது நான் உடன்இல்லை. எவ்வளவு ரூபாய் கிரயம் பேசினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கிரயபத்திரத்தில் ரூ.26,50,000/– என்று விலை காட்டப்பட்ட விவரம் தெரியும். நான் தான் கிரயத்தை பேசி தொகையை வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த சொத்தின் உண்மையான சந்தை மதிப்பு அப்போது எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உண்மையான மதிப்பை விட கிரயத்தொகை கூடுதலா அல்லது குறைவா என்று எனக்கு தெரியாது. பவர்பத்திரம் மோசடியானது என்று நிருபணவாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் அதை பார்த்தால் தான் சொல்லமுடியும். நிருபணவாக்குமூலத்தில் மோசடியாக பவர்பத்திரம் எழுதப்பட்டதாக நான் கூறியுள்ள ஆவணம் 1996ம் ஆண்டு ஏற்பட்டதாக தெரிகிறது. அந்த பவர்பத்திரத்தில் என்ன சரத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் அதை வைத்து பலரிடம் மோசடியாக பணம் பெற்றுள்ளார்கள் என்று தான் தெரியும். யார் யாரிடம் பணம் வாங்கியுள்ளார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லஇயலாது. அந்த பவர்பத்திரத்தை இந்தியாவிற்கு வந்தபின்னர் நானும், சகோதரரும் ரத்துசெய்தோம் என்றால் சரிதான். இருக்ககூடாது என்று ரத்துசெய்தோம். அந்த பவர்பத்திரத்தின் அடிப்படையில் ஏதாவது தவறான நடவடிக்கை நடந்ததாக வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் தவறு நடந்துவிட கூடாது என்பதற்காக ரத்து செய்தேன். 07.08.2002ம் தேதி பதிவுசெய்யப்பட்ட ரத்துபத்திரம் மூலமாக நானும், மனுதாரரும் அதை ரத்துசெய்துள்ளோம் என்றால் ரத்துசெய்தோம், வருடம் ஞாபகமில்லை. நாங்கள்

எழுதிகொடுத்த பத்திரத்தை ரத்து செய்துள்ளதாக அதில் வாசகங்கள் கண்டுள்ளது என்றால் அசல் ஆவணத்தை பார்த்து தான் அதுபற்றி கூறஇயலும். நிருபணவாக்குமூலத்தில் பவர்பத்திரம் குறித்து பொய்யான குற்றச்சாட்டுகள் கூறியுள்ளேன் என்றும், பொய்யாக குற்றவியல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சமாதான உடன்படிக்கையின் படி மற்றொரு சொத்தை விற்று ரூ.42லட்சம் எனக்கு பைசல் செய்யப்படவேண்டியது என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. சமாதான உடன்படிக்கை படி எனக்கு பைசல் செய்யவேண்டிய தொகைக்காக மற்றொரு சொத்தை விற்பதற்கு மனுதாரர் என்னை அழைத்தார் என்றும், நான் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் அடுத்து இறுதி தீர்ப்பாணை பிறப்பிக்க மனுசெய்யவேண்டிய அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. ரூ.42லட்சம் எனக்கு சேரவேண்டியது குறித்து நான் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் நான் அறிவிப்பு அனுப்பினேன். அதை இந்த மனுவிசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. நான் இதுசம்மந்தமாக எந்த நடவடிக்கையிம் எடுக்கவில்லை என்றும், மனுதாரர் தரப்பில் கேட்டபோதெல்லாம் நான் அதை உதாசீனபடுத்தினேன் என்றால் சரியல்ல. 2006ம் ஆண்டு சமாதானம் ஏற்பட்ட பின்னர் திருமண மண்டபத்தை என்னுடைய நிர்வாகத்தில் வைத்துகொண்டு வருமானத்தை நான் தான் பெற்றுவருகிறேன் என்றால் சமாதான உடன்படிக்கை 8வது சரத்து படி நான் வைத்துள்ளேன். அந்த வருமானத்தை நான் தான் பெற்று வருகிறேன். தாவா 1வது அயிட்ட சொத்தை வாடகைக்கு விட்டு அந்த வாடகையை நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். சமாதான உடன்படிக்கையின் படி அவ்வாறு செய்கிறேன். சமாதான உடன்படிக்கையில் அம்மாதிரியான சரத்து கிடையாது என்றால் சரியல்ல. நான் பெற்ற வாடகை தொகைகளில் ஏதாவது ஒரு பங்கை மனுதாரருக்கு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. ஒப்பந்தப்படி அவர் நடக்கவில்லை என்பதால் நான் கொடுக்கவில்லை. சமாதான

உடன்படிக்கை படி மனுதாரர் சரியாக நடந்துகொண்டார் என்றும், நான் தான் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து மதிப்பானது உண்மையான சந்தை மதிப்பு கிடையாது என்றும், அது நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்காகவும், நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும் குறிப்பிடபடுவது என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.